# பச்சைப் பயறு சாகுபடி தொழில் நுட்பங்கள்

தமிழ்நாட்டின் முக்கிய பயறு வகைகளில் துவரை, உளுந்து, கொண்டக்கடலை அடுத்து பச்சைப் பயறு முக்கிய ஒன்றாகும். இதில் சுமார் 20 – 25 % புரதச்சத்து உள்ளது. இதில் உள்ள அமினோ அமிலங்கள் எளிதில் செரிக்கும் தன்மை உடையதால், இவை சார்ந்த உணவுப் பொருட்கள் சிறு குழந்தைகள், வயது முதிர்ந்தோர், நோய் வாய்ப்பட்டோர்கள் என அனைத்து தரப்பினருக்கும் ஏற்றவை.

## பட்டம்

இது ஆடிப்பட்டம், புரட்டாசிப் பட்டம் மற்றும் கோடைப் பருவம் போன்ற எல்லாப் பருவங்களிலும், நெல் தரிசில் நெல் அறுவடைக்குப் பின்னும் பயிர் செய்யப்படுகிறது. தென்னை போன்ற மரங்களில் ஊடாகவும், பருத்தியில் ஊடு பயிராகவும் பயிர் செய்ய ஏற்றது.

## இரகங்கள் :

| | | |
|---|---|---|
| ஆடிப்பட்டம் | – | கோ – 3, 4, 6, கே.எம். 2, வம்பன் [ஜி.ஜி] 1, 2 மற்றும் வி.ஆர்.எம் [ஜி.ஜி] – 1 |
| புரட்டாசிப்பட்டம் | – | கோ – 4, 6, கே.எம். 2, வம்பன் [ஜி.ஜி] 1, 2, வி.ஆர், எம் [ஜி.ஜி] – 1 மற்றும் பையூர் 1 |
| கோடைப்பருவம் | – | கோ – 4, கே.எம். – 2, வம்பன் 1,2 வி.ஆர்.எம் [ஜி.ஜி] 1 மற்றும் பையூர் – 1 |
| நெல் தரிசு | – | ஏ.டி.டீ 2,3 |

## விதை நேர்த்தி

விதைகளை விதைப்பதற்கும் 24 மணி நேரத்திற்கு முன் 1 கிலோ விதைக்கு 2 கிராம் கார்பண்டாசிம் அல்லது 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து விதைக்க வேண்டும். இதனால் விதை மூலம் பரவும் நோய்களையும், வேர் அழுகல் நோயையும் கட்டுப்படுத்தலாம்.

## விதை கடினப்படுத்துதல் :

* இந்த தொழில்நுட்பம் மானாவரி பச்சை பயிருக்கு ஏற்றது.
* இரண்டு ஈர சணல் கோணிப்பைகளுக்கு இடையே பரவலாக ஒரு மணிநேரம் வைத்திருக்க வேண்டும்.

* பின் 25 கிராம் சீமைக்கருவேல் இலையை பிழிந்து, இலைச்சாற்றை 2½ லிட்டர் தண்ணீரில் கலந்து ஈரசணல் கோணியின் மீது தெளித்து விதைகளை ஒரு மணிநேரம் ஊற வைக்க வேண்டும்.
* ஊற வைத்த விதையை ஒரு நாள் நிழலில் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும்.

**விதை அளவு :** ஏக்கருக்கு 8 கிலோ

## பயிர் எண்ணிக்கை பராமரிப்பு

* ஏக்கருக்கு 1, 33, 320 செடிகள் என்ற அளவில் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க பச்சை பயிரை 30 x 10 செ.மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும்.
* நெல் தரிசில் விதையை, வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளியில் நெல் அறுவடைக்கு 5 முதல் 10 நாட்களுக்கு முன் விதைக்கவும்.

## உர மேலாண்மை

* ஏக்கருக்கு 5 டன்கள் தொழு உரமிடவும்.
* மானாவாரிப்பயிருக்கு ஊட்ட மேற்றிய தொழுவுரத்தை இடலாம்.
* ஏக்கருக்கு 4 பொட்டலங்கள் ரைசோபியம் [800 கிராம்] மற்றும் 4 பொட்டலங்கள் பாஸ்போ பாக்டீரியா [800 கிராம்] 20 கிலோ தொழுபுரத்துடன் கலந்து சீராக வயலில் தூவவும்.
* மானாவரிப் பயிருக்கு ஏக்கருக்கு 5 : 10 : 5 கிலோ என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இடவும்.
* இறவைப் பயிருக்கு ஏக்கருக்கு 10 : 20 : 10 கிலோ என்ற அளவில் தழை மணி மற்றும் சாம்பல் சத்து இடவும்

## இலைவழி உரமிடல்

* மானாவரி மற்றும் இறவை பயிருக்கு இரண்டு சதவீத யூரியா கரைசலை பூக்கும் தருணத்திலும், மற்றும் 15 நாட்கள் இடைவெளியில் என இருமுறை தெளிக்கவும்
* நெல் தரிசில் இரண்டு சதவீத டி.ஏ.பியை பூக்கும் தருணத்தில் மற்றும் 15 நாட்கள் இடைவெளியில் என 2 முறை தெளிக்கவும், [ஒருமுறைக்கு 4 கிலோ டி.ஏ.பியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்]

## வளர்ச்சி ஊக்கி தெளித்தல்

* பூக்கும் தருனத்தில் மற்றும் 15 நாட்கள் கழித்து ஒரு முறையும், 40 பிபி எம் என்ற அளவில் என் ஏ ஏ 2 முறை தெளிக்கவும். [ஒரு முறைக்கு 80 மில்லி பிளானோபிக்ஸ் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்]

**களை நிர்வாகம்**

* ப்ளுகுளோரலின் ஏக்கருக்கு 600 மிலி அல்லது பென்டிமெத்தலின் 800 மிலி என்ற அளவில் விதைத்த 3 நாட்களுக்குப்பின் தெளிக்க வேண்டும்.
* விதைத்த 30 நாட்களுக்கு பின் ஒரு கைக்களை எடுக்க வேண்டும்.

**நீர் நிர்வாகம்**

* விதைத்தவுடன் நீர்ப் பாய்ச்ச வேண்டும்
* விதைத்த 3 நாட்கள் கழித்து உயிர் தண்ணீர் கட்ட வேண்டும்.
* 10 – 15 நாட்களுக்கு ஒரு முறை தேவைக்கேற்ப நீர்ப் பாய்ச்ச வேண்டும்.
* பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் தருணத்தில் நீர்ப் பாய்ச்சுதல் அவசியம்.

## பயிர் பாதுகாப்பு

**பூச்சி மேலாண்மை**

| வ.எ. | பூச்சி | கட்டுப்படுத்தும் முறை |
|---|---|---|
| 1. | அசுவினி மற்றும் வெள்ளை ஈ | ஒரு எக்டருக்கு 250 லிட்டர் தண்ணீரில் மீதைல்டெமடான் (25 ஈ.சி) 500 லிட்டர் கலந்து தெளிக்க வேண்டும். (அ) ஒரு ஏக்கருக்கு 100 லிட்டர் தண்ணீரில் மீதைல்டெமடான் (25 இ.சி) 200 மி.லிட்டர் கலந்து தெளிக்க வேண்டும் (அதாவது) 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி லிட்டர் கலக்க வேண்டும். |
| 2. | காய்புழு | 1. இனக்கவர்ச்சிப் பொறி எக்டருக்கு 12 அல்லது ஏக்கருக்கு 5 எண்ணிக்கை வைத்து அதனை கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டும்.<br>2. பறவை அமரும் இருக்கை எக்டருக்கு 50 (அ) ஏக்கருக்கு 20 எண்ணிக்கை வைக்க வேண்டும்.<br>3. கையின் மூலம் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும்.<br>4. ஒரு எக்டருக்கு 625 லிட்டர் நீருடன் கலந்து ஏதேனும் ஒரு மருந்தை தெளிக்க வேண்டும்.<br>* டைகுளோர்வாஸ் 625 மிலி<br>* குயினால்பாஸ் 4 சத தூள் 25 கிலோ கிராம்<br>* பாசலோன் 35 இ.சி 1.25 லிட்டர் |

## நோய் மேலாண்மை

| வ.எ. | நோய்கள் | கட்டுப்படுத்தும் முறை |
|---|---|---|
| 1. | துரு நோய் | ஒரு எக்டருக்கு நனையும் கந்தகம் 2.5 கிலோ வீதம் தெளிக்க வேண்டும். [அ] ஒரு ஏக்கருக்கு 1 கிலோ வீதம் தெளிக்க வேண்டும். [அதாவது 1 லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம்] கலக்க வேண்டும். |
| 2. | வேர் அழுகல் நோய் | 1. அடியுரமாக துத்தநாக சல்பேட் ஒரு எக்டருக்கு 25 கிலோ [அ] ஏக்கருக்கு 10 கிலோ வீதம் அளிக்க வேண்டும்.<br>2. விதைத்த 30 நாட்களுக்கு பிறகு ஒரு எக்டருக்கு 2.5 கிலோ [அ] ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஸ் புளோரோசன்ஸ்யை 25 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து மண்ணில் தூவி விட வேண்டும்.<br>3. விதைத்த 30 நாட்களுக்கு பிறகு ஒரு எக்டருக்கு 2.5 கிலோ [அ] ஏக்கருக்கு 1 கிலோ டிரைக்கோ டெர்மா விரிடியை 25 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து மண்ணில் தூவி விட வேண்டும். |
| 3. | தேமல் நோய் | நோய் வாய்ப்பட்ட செடிகளை பிடுங்கி எரிக்க வேண்டும். இந்நோயை கடத்தும் பூச்சியை அழிக்க மோனோ – குரோட்டோபாஸ் எக்டருக்கு 150 லிட்டர் நீருடன் 500 மில்லி லிட்டர் அல்லது ஏக்கருக்கு 100 மில்லி லிட்டர் என்ற வீதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். [அதாவது 10 லிட்டர் கொள்ளவு வேண்டும்] |


-------------- தொகுப்பு : --------------

திரு. **S. செந்தில்குமார்,** M.Sc.,(Agri)

தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்)

முனைவர். **T. சுந்தர்ராஜ்,** M.Sc.,(Agri), Ph.D.,

முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்

ICAR - வேளாண்மை அறிவியல் மையம்,

எலுமிச்சங்கிரி, கிருஷ்ணகிரி - 635 120.



**ஸ்ரீ குமரன் ஆப்செட்,** பைரப்பா தெரு, கிருஷ்ணகிரி. செல் : 92453 63048